பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
06 04 2026 MONDAY 7 15 PM ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- அஸ்ஸாம், கேரளம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

- மேற்குவங்க கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரியாக திரு. Vibhu Goel நியமிக்கப்பட்டுள்ளார்.

- உணவு தானியங்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- யுக்ரைன் மீது, ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர்.

- ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Lalit இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<

அஸ்ஸாம், கேரளம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள வாக்குப்பதிவு அமைதியாக நடைபெறுவதற்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதற்கிடையே, தமிழக சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாகவும், மேற்குவங்க சட்டப்பேரவைக்கு முதல்கட்டமாக 152 தொகுதிகளிலும் வரும் 23ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

மனுக்கள் மீதான பரிசீலனை நாளை மேற்கொள்ளப்படும்.

மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் வியாழக்கிழமை கடைசி நாளாகும். அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்

மேற்குவங்க சட்டப்பேரவைக்கு இரண்டாம் கட்டமாக 142 தொகுதிகளில், வரும் 29ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 4ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

இதற்கிடையே, அஸ்ஸாம், கேரளம் மற்றும் புதுச்சேரியில் பிஜேபி, காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகள் உட்பட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

>>>>>><<<<<

அஸ்ஸாமின் வளர்ச்சியில் அக்கறையின்றி காங்கிரஸ் செயல்பட்டதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

அஸ்ஸாமில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், அம்மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தவில்லை என்று குறை கூறினார்.

>>>>>><<<<<

தொழில் அதிபர்களுக்கு ஆதரவாக பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று அஸ்ஸாமில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, அஸ்ஸாமிலிருந்து ஊடுருவல்காரர்கள் வெளியேற்றப்பட்டதாக தெரிவித்தார்.

அஸ்ஸாமின் வளர்ச்சிக்காக காங்கிரஸ் தலைமையிலான அரசு நிறைவேற்றிய திட்டங்களையும் திரு. மல்லிகார்ஜுன கார்கே பட்டியலிட்டார்.

>>>>>><<<<<

உலகின் பல்வேறு பகுதிகளில் பெட்ரோல் டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ள போதிலும், மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக நம் நாட்டில் பெட்ரோலியப் பொருட்களின்

*விலை உயர்த்தப்படவில்லை என்று பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. அமித் ஷா கூறியுள்ளார்.*

*இன்று புதுச்சேரியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*பெட்ரோலியப் பொருட்களின் விநியோகம் சீராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*புதுச்சேரியில் காங்கிரஸ் - திமுக கூட்டணி அரசு ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, 15 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடு நடைபெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*புதுச்சேரியின் 3 ஆண்டுகளுக்கான பட்ஜெட் தொகை இது என்றும் அவர் கூறினார்.*

*வேலைவாய்ப்பின்மையும் 47 சதவீதம் அளவிற்கு அதிகரித்ததாக கூறிய திரு. அமித் ஷா, தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பொறுப்பேற்ற பின்னர் அது 4 சதவீதமாக குறைக்கப்பட்டதாக தெரிவித்தார்.*

*>>>>>><<<<<*

*புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.*

*30 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்,*

*வேலைவாய்ப்பற்ற இளையோருக்கு மாதந்தோறும் 20 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும்,*

*புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகள் இதில் இடம்பெற்றுள்ளன.*

*>>>>>><<<<<*

*கேரளத்தில் மத்திய அரசின் திட்டங்களை ஆளும் இடதுசாரி கூட்டணி அரசு முழுமையாக நிறைவேற்றவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.*

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அம்மாநில பிஜேபி மாநிலத் தலைவர் திரு. ராஜீவ் சந்திரசேகர், வளர்ச்சியடைந்த கேரளத்தை உருவாக்க தேசிய ஜனநாயக கூட்டணி பாடுபடும் என்று கூறினார்.

>>>>>><<<<<

கேரளாவில் ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி கூட்டணி, பிஜேபியுடன் ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கன்னூர் மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், இதன் அடிப்படையில் இரு கட்சிகளும் சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொண்டுள்ளதாகவும் குறை கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு. பினராயி விஜயன், காங்கிரஸ் கட்சி தான் பிஜேபியுடன் ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாக கூறினார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், கேரளாவிற்கு முழுமையாக நிதியுதவி வழங்காத, மத்திய அரசுக்கு எதிராக காங்கிரஸ் எந்தவொரு குற்றச்சாட்டையும் தெரிவிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

மேற்குவங்க கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரியாக திரு. Vibhu Goel நியமிக்கப்பட்டுள்ளார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கான மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் பணிபுரியும் நீதித்துறையை சேர்ந்தவர்களுடன் ஒருங்கிணைந்து இவர் பணியாற்றுவார் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அவருக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகள் குறித்த விவரங்களும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

உணவு தானியங்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த நுகர்வோர் விவகாரங்கள் துறை கூடுதல் செயலர் திரு. அனுபம் மிஸ்ரா, பருப்பு வகைகள் உற்பத்தி கடந்த ஆண்டைவிட அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

மேற்காசியாவில் நிலவும் சூழல் காரணமாக, சர்வதேச அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ள போதிலும், நம் நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலை கட்டுக்குள் உள்ளதாகவும் திரு. அனுபம் மிஸ்ரா கூறினார்.

இந்த செய்தியாளர்கள் சந்திப்பின் போது பேசிய உணவுத்துறை இணைச்செயலர் திருமதி Shikha, கோதுமை மற்றும் நெல் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக தெரிவித்தார்.

தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ், உணவு தானியங்கள் தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும் திருமதி Shikha கூறினார்.

>>>>>><<<<<

ஈரானிலிருந்து ஆயிரத்து 777 இந்தியர்கள் பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், அர்மேனியா மற்றும் அஜர்பைஜான் வழியாக இவர்கள் தாயகம் அழைத்து வரப்பட்டதாக கூறினார்.

மேற்காசியாவில் நிலவும் சூழ்நிலையை மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வெளியுறவு அமைச்சர்களுடன் தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்தியதாக கூறினார்.

ஈரான் வெளியுறவு அமைச்சரும், டாக்டர் ஜெய்சங்கரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தற்போதைய சூழல் குறித்து எடுத்துரைத்ததாக திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

>>>>>><<<<<

யுக்ரைன் மீது, ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர்.

Odesa- நகரத்தை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் ஒரு குழந்தை மற்றும் இரண்டு பெண்கள் உயிரிழந்ததாக தகவல்கள் கூறுகின்றன.

இந்த தாக்குதலில் 11 பேர் காயமடைந்ததாக யுக்ரைன் அதிபர் திரு. Volodymyr Zelenskyy கூறியுள்ளார்.

யுக்ரைனும், ரஷ்யா மீது ட்ரோன் தாக்குதலை நடத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, யுக்ரைனின் 50 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ரஷ்யா கூறியுள்ளது.

>>>>>><<<<<

ஈரானின் பெட்ரோலிய வேதிப்பொருட்கள் உற்பத்தி நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. Isreal Katz கூறியுள்ளார்.

ஈரானின் 50 சதவீத பெட்ரோலிய வேதிப்பொருட்களின் உற்பத்தி நிலையத்தின் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அவர் சமூகவலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

நேபாள நாடாளுமன்றத்தின் அவைத் தலைவராக திரு. Dol Prasad Aryal இன்று பதவியேற்றுக் காண்டார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அந்நாட்டு அதிபர் திரு. Ramachandra Paudal முன்னிலையில் அவர் பதவியேற்றுக் கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<

பஞ்சாபில், பாகிஸ்தான் உளவு அமைப்புகளுக்கு ஆதரவாக செயல்பட்டு வந்த 3 பேரை அம்மாநில காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

குஜராத் தீவிரவாத தடுப்பு படையினருடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது, பஞ்சாப் மாவட்ட எல்லைப் பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த பஞ்சாப் காவல்துறை தலைவர் திரு. கவுரவ் யாதவ், கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கையெறி குண்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டதாக கூறினார்.

இவர்களிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. கவுரவ் யாதவ் தெரிவித்தார்.

>>>>>><<<<<

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Lalit* இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

கிர்கிஸ்தானின் *Bishkek*-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் *55* கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், *11-3* என்ற புள்ளிக்கணக்கில் சீனாவின் *Huoying Shi*-யை வென்றார்.

>>>>>><<<<<

ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் *Nikhat Zareen* வெண்கலப்பதக்கம் வென்றார்.

மங்கோலியாவின் *Ulaanbaatar*-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் *51* கிலோ எடைப் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>END<<<<<